உ

தேவிசகாயம்.

இராமநாதபுரம், அரண்மனையில்

வீற்றிருக்கும்

இராசராசேசுவரிமீது

கலிவிண்ணப்பமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914.

திருச்சிற்றம்பலம்.

இராசராசேசுவரிமாலை.

காப்பு-நேரிசைவெண்பா.

காவை பலவுடைத்தாக் காசினியெ லாந்துதிகருந்
தேவை யிராசரா சேசுவரிமேற்—பாவை
தொடுக்க வருள்புரியுந் தூயமதமே
விடுக்குமோ ரத்தி விரைந்து.

நாலடித்தரவுக் கொச்சகக்கலிப்பா.

சீர்பூத்தமுக்கட்சிவபெருமானுள்ளமகிழ்
கார்பூத்தகூந்தற்கடவுட்பிடியேநின்
தார்பூத்தசேவடியைத்தாழவருள்செய்யம்மே
ஏர்பூத்ததேவையிராசராசேசுவரியே. (1)

மண்பூத்தசெல்வமதியேனிறைவனுளக்
கண்பூத்தமுக்கட்கனியேகனிரசமே
ஒண்பூத்தநின்சேவடிக்கன்புனுற்றவனே
எண்பூத்ததேவையிராசராசேசுவரியே. (2)

வானோர்பரவுமணிவிளக்கேயானந்தத்
தேனேதெவிட்டாச்செழுங்கனியேசெம்பாகே
யானாதரவின்றியிங்குனடியேத்திநிற்ப
ஏனோவிரங்காயிராசராசேசுவரியே. (3)

பாடவறியேன்படிக்கறியேனின்புகழை
நாடவறியேனலிகின்றேனின்கோயில்
தேடவறியேன்றிருவஞ்செழுத்திங்கன்
ஏடவறிகென்னாயிராசராசேசுவரியே. (4)

மெய்வைத்தகாழிவிரகனழவுட்குழைந்து
சைவத்தனிஞானந்தனையருத்தும்பொக்கிஷமே
உய்வைத்தருகென்றுனையடைந்துநின்றக்கால்
எய்வகற்றொணாதோவிராசராசேசுவரியே. (5)

பெற்றுகந்தான்பாகம்பிரியாப்பெருவாழ்வே
கற்றவர்கணாடுமருட்கற்பகமேயென்றுநிதம்
பற்றுவார்பற்றும்பழம்பொருளேநின்றிருத்தாள்
எற்றடைவதம்மாவிராசராசேசுவரியே. (6)

கோதுபதியாதுகுவலயங்கைக்கொண்டாள்பூ
மாதுபதிபாற்கரசுசுவாமிமகிபாலபதி
சேதுபதிசிந்தித்தயாவையுமேசித்திக்க
ஈதோர்வரந்தரவிராசராசேசுவரியே. (7)

சேவையுகைக்குமுக்கட்செல்வனொடுவெங்கொடுஞ்சூர்
மாவைவகிர்ந்தவடிவேலனோடானிவந்து
தேவைநகர் புரக்குந்தேவிவரக்காண்பேனோ
ஏவைவிழியாயிராசராசேசுவரியே. (8)

பொன்னருமன்றின்வயிற்போதாந்தமாநடனம்
பன்னளுமாற்றும்பரம்பரனுள்ளத்தமரும்
அன்னநின்றாளையனவரதநின்றேத்த
எந்நாளருள்வாயிராசராசேசுவரியே (9)

மாதர்விழிக்கயலான்மாழாந்துநெஞ்சழிந்து
போதுகழிக்கும்புலையேற்கினிதிரங்கிக்
கோதுபடாதகுணசாகரமேயென்
ஏதமகற்றாயிராசராசேசுவரியே. (10)

சேமநிதியேதிரைக்கடல்வாய்நஞ்சயின்றோன்
வாமமருவுமணிவிளக்கேயென்றன்றன்
நாமம்பரவுநலமருளிச்செய்வாயோ
ஏமவரையேயிராசராசேசுவரியே. (11)

குன்றோர்சிலையாக்கைக்கொண்டான்றிருத்தில்லை
மன்றாடுவானுண்மகிழும்பரையேநீ
அன்றேலெனக்கிங்கருளுநரார்மாநான்
என்றேதானுய்கேனிராசராசேசுவரியே. (12)

திங்கள் புனைந்தான் றிருவுளத் துவைத்தெழுதும்
செங்கட்கரும்பேநற்சித்தாந்தசைவநெறி
எங்குமேயோங்கவிவணேற் றும்விளக்கேயென்ன
இங்கஞ்சலென்னுயிராசராசேசுவரியே. (13)

ஓவவாததென்னுமுலகமொழியோராமே
அவ்வாறுமீ தும்மலைநீவாமமிற்பச்
செவ்வானமேனிச்சிவபெருமானில்லிரந்த
தெவ்வாறுகண்டாயிராசராசேசுவரியே. (14)

பொங்கோதமேனிப்புயல்வண்ணன்காண்பரிய
சங்கோலிடுங்கைத்தமனியமேனின்னடியார்
தங்கோலமெண்ணுஞ்சதிரளிக்கவேண்டுமென்பேற்
கிங்கேயருள்காணிராசராசேசுவரியே. (15)

கள்ளநயனத்தார்தங்காதல்வழிப்பட்டொழுகும்
உள்ளமுடையேனுனதருளைமேவுவனோ
வெள்ளைவிடையான்விரிசடையான் றன்வாமத்
தெள்ளளவுநீங்காவிராசராசேசுவரியே. (16)

வன்னிகருங்கொங்கைமடவார்முயக்கதனிற்
சின்னஞ்சிறியேன்சிதறுண்டுநிற்கின்றேன்
இன்னலுழக்கண்டிங்கிரங்காதிருப்பதுவும்
இன்னமுதேசால்போவிராசராசேசுவரியே. (17)

பூப்பிட்டமாயோன் புணர்வரியாப்புண்ணியன்றன்
மாப்பிட்டுவந்திமகிழ்ந்துதவக்கையேற்றுச்
சாப்பிடானென்பர்நின் றனைப்பிரியானன்னானுக்
கேற்பட்டதீதென்னிராசராசேசுவரியே. (18)

வானிரங்குஞ்சூர்தடிந்தவள்ள லுக்குவேல்கொடுத்த
மானிரங்குங்கண்ணையுன்வண்டமிழ்ச்சீர்யானேதத்
தேனிரங்கும்பூஞ்சோலைத்தேவைநகர்மேவியநீ
ஏனிரங்காயம்மா விராசராசேசுவரியே. (19)

கல்லனையுநெஞ்சக்கயவனேனின்காட்சி
மல்லனையுந்தேவைநகர்வந்துகண்டுதெண்டனிட்டென்
அல்லல்தவிர்கென்றறைந்திடவும்வன்மொழியால்
இல்லையென்றுஞ்சொல்லாயிராசராசேசுவரியே. (20)

யொன்னேகருணைப்புயலேசிவஞான
மின்னேயொருநான்குவேதம்பயனேயிங்
குன்னுதரவன்றியுற்றதுணையில்லையினி
என்னையுரைப்பதிராசராசேசுவரியே. (21

தேன்படும்பூஞ்சோலைத்தேவைநகர்மேவியநீ
யான்படும்பாடெல்லாமிதயத்தறிந்திருந்தும்
மான்படுங்கணம்மேமகிழ்வினொருவாசகத்தான்
ஏன்படுவதென்னுயிராசராசேசுவரியே (22)

தன்னைப்பாரில்லாத்தமனியமேசேதுபதி
பொன்னைப்பாநன்னெஞ்சப்பூங்கோயின்மேவியநீ
மின்னைப்பாம்வேணிவிமலனொடுமின்றெளிவந்
தென்னைப்பாவென்னுயிராசராசேசுவரியே. (23)

கல்லேனுஞ்சற்றேகனியுமெனினின்றனெஞ்சக்
கல்லோசிறிதுங்கனிந்துருகக்காணேனே
நல்லாயதுநீகமுதவுங்காரணமோ
எல்லாமுடையாயிராசராசேசுவரியே. (24)

கங்கைமதியங்கரந்தசடைக்கட்டழகன்
செங்கைபிடித்தவருட்செல்வமேநின்னைமனப்
பங்கயத்தில்வைத்துப்பரிவினிதமர்ச்சிக்க
இங்கோர்வரந்தாவிராசராசேசுவரியே. (25)

அஞ்செழுத்தின்மும்மைப்பொருளுணர்த்தியாண்டரு
நெஞ்சிரங்காதேனேனிகமாகமம்பரவும் [ள
வஞ்சியபிராமிவயங்குமெழிற்றேவைநகர்
எஞ்சகிலாதோங்குமிராசராசேசுவரியே. (26)

அன்புபொறையேயவாவறுத்தன்முன்னுய
துன்பகற்றுமாமலர்நின்றாணையடிக்குச்சாத்துவனே
நன்பவளமேனிநம்பன்மகிழ்தேவைநகர்
இன்பவுருவேயிராசராசேசுவரியே. (27)

தாயிற்பரிவாமெஞ்சங்கரனுமன்பனேநின்
சேயைக்கறிசமைத்துத்தாவென்னுந்தெய்வமொழி
நாயிற்கடையேனுண்ணுடுதொறுநெஞ்சயர்வேன்
ஏயற்புதமீதிராசராசேசுவரியே (28)

நீலக்கண்மாதரார்நேயவலைப்பட்டழுந்தும்
சாலக்கொடியேன்றனையாண்டருளம்மே
கோலக்குறத்திகொழுநன்றனைநல்கும்
ஏலக்குழலாயிராசராசேசுவரியே. (29)

என்றனவேற்பாற்கரசாமியேந்தலுககு
நன்றுதவியென்றனலிவகற்றியாள்வாயோ
தென்றமிழ்நாடேத்துமெழிற்றேவைநகர்மேவியநீ
என்றென்றும்வாழியிராசராசேசுவரியே (30)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசிவஞானயோகிகள்சேவடிவாழ்க.